நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**"பசுமை மின் உற்பத்திக்கான ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்த வேண்டும்'**

First Published : 27 Aug 2011 03:33:16 AM IST

தாம்பரம் ஆக. 26: பசுமை மின்உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட முன்வர வேண்டும் என்று டாடா கன்சல்டன்சி நிறுவன திட்ட மேலாளர் டி.அருள், மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

சென்னை காட்டாங்கொளத்தூர் வள்ளியம்மை பொறியியல் கல்லூரி மின்னியல் மற்றும் மின்தொடர்பியல் துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற பசுமை மின்னியல் கருத்தரங்கில் மேலும் அவர் பேசியது:

பசுமை மின்சக்தித் தொடர்பான ஆராய்ச்சிகளுக்குச் சர்வதேச அளவில் பெரும் வரவேற்பு உள்ளது. இன்று காற்று, நீர், உணவுக்கு அடுத்த இன்றியமையாத தேவையாக மின்சக்தி உள்ளது. மின்சக்தித் தேவை பன்மடங்கு பெருகி வருகின்றது.

நிலக்கரி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் போது உருவாகும் கரிப்புகை மாசு மூலம் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், பூமியின் வெப்பமும் அதிகரித்து வருவது குறித்து விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜெர்மனி நாட்டில் பெர்லின் நகரில் சூரிய ஒளி மூலம் பெறப்படும் மின்சக்தியால் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

அவ்வாறு இயக்கப்படும் ரயில்களில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரிகளில் சேமிக்கப்படும் மின்சாரம் மூலம் நகரின் ஒரு பகுதியின் மின்தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது என்றார் அவர்.

வள்ளியம்மை பொறியியல் கல்லூரி முதல்வர் எம்.பாலசுப்பிரமணியன், பி.எஸ்.என்.எல். உதவி பொதுமேலாளர் ஏ.ஜனார்த்தனா, துறைத் தலைவர் கோமளா ஜேம்ஸ், எஸ்.பி.மனோஜ், எஸ்.சரண்யா, டி.ஸ்வாதி, மகேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 26 Aug 2011 02:50:30 PM IST

நாமக்கல், ஆக. 25: திருத்தியமைக்கப்பட்ட வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பலன் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஜெ.குமரகுருபரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற, திருத்தியமைக்கப்பட்ட வேளாண்மை காப்பீட்டுத் திட்டம் குறித்த பயிலரங்குக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

திருத்தியமைக்கப்பட்ட வேளாண்மை காப்பீட்டுத் திட்டம் முன்னோடி திட்டமாக நாமக்கல், சிவகங்கை, கடலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.நாமக்கல் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் பயிருக்கு இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து கொள்ளலாம்.இதில், ஊராட்சி அளவில் பயிர் இழப்பீடு கணக்கீடு செய்யப்பட்டு, அதற்கேற்ப இழப்பீடு வழங்கப்படும். 70 முதல் 90 சதவீதம் வரை இழப்பீடு தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

மேலும், முன் பருவ காப்பீடு செய்து, பருவ நிலை மாற்றத்தால் பயிர் செய்ய இயலாமல் போனால் வானிலை பருவ கால அறிக்கைபடி காப்பீடு செய்த தொகையில் 25 சதவீதம் இழப்பீடாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 21 ஹெக்டேர் நெல் பயிருக்கு ரூ.37,920 காப்பீடு தொகையாக நிர்ணயிக்கப்படுகிறது. காப்பீட்டு தொகையில் விவசாயிகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1024 பிரிமியமாக செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் கடன் பெறும் விவசாயிகள் பிரிமியத் தொகையை நவம்பர் 30-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். கடன் பெறாத விவசாயிகள் பிரிமியத் தொகை நவம்பர் 15-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் நெல்பயிருக்கு காப்பீடு செய்து அதற்கான பிரிமியக் கட்டணத்தை செலுத்தி பயனடைய வேண்டும் என்றார் ஆட்சியர்.

வேளாண்மை இணை இயக்குநர் ஏ.பிரபாகரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சீனிவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பராமரிப்பு இல்லாத சவுக்கு மரக் காடு!**

கே.பி. அம்பிகாபதி

First Published : 27 Aug 2011 04:08:38 AM IST



வேதாரண்யம்: சுனாமி சீற்றத்தின்போது உயிரிழந்தவர்கள் நினைவாக, வேதாரண்யம் அருகே உலக சாதனையாக அமைக்கப்பட்ட சவுக்கு மரக் காடு தற்போது கவனம் குறைந்து, பராமரிப்பு இல்லாமல் அழிந்து வருகிறது.

இயற்கைச் சீற்றத்தின் தடுப்பாக இருக்க வேண்டிய இந்த அரண், அதன் சிறப்பையும், நோக்கத்தையும் ஒரே நேரத்தில் இழந்து வருகிறது. 2004 டிசம்பர் 26-ல் ஏற்பட்ட சுனாமி எனப்படும் ஆழிப் பேரலையால் உயிரிழப்பு உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டன. இயற்கை அரண்கள் அமையப் பெற்ற பகுதிகளில் இதன் பாதிப்பு குறைவாக இருந்தது.

குறிப்பாக நாகை, திருவாரூர் மாவட்டக் கடலோரங்களில் அமைந்த அலையாத்திக் காடுகள் எனப்படும் மாங்குரோ காடுகள், சவுக்கு உள்ளிட்ட மர வளம் அரணாக அமைந்தன. இவை பேரலையின் வேகத்தைக் குறைத்தன.

இதைப் படிப்பினையாகக் கொண்டு, நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் கிராமத்தில் உள்ள வங்கக் கடலின் கரையோரத்தில் உருவாக்கப்பட்டதுதான் கின்னஸ் சவுக்கு மரக் காடுகள்.

2004-ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி தாக்குதலில் உயிரிழந்த 1,74,542 பேரின் நினைவாக, 2,54,464 சவுக்கு மரக் கன்றுகள் நடப்பட்டன. 2005-ம் ஆண்டு காந்தி ஜெயந்தி நாளான அக்டோபர் 2-ம் தேதி இந்தப் பணிகள் நிறைவடைந்தன.

இதற்கான ஏற்பாடுகளை நாகை மாவட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள், மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றுடன் பெங்களூர் விப்ரோ கேர்ஸீம், பிட் சுனாமியும் இணைந்து செய்தன.

இந்தப் பணி ஒரே நாளில் கின்னஸ் உலக சாதனையாக நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த அரண் அமைந்துள்ள பகுதி புஷ்பவனம் கிராமத்தில் தொடங்கி, நாலுவேதபதி கிராம எல்லை வரையில் உள்ள கடலோரத்தில் சுமார் இரண்டரை கி.மீ. தொலைவுக்கு சுமார் 300 மீட்டர் அகலம் கொண்ட பரப்பில் உள்ளது.

தொடக்க நிலையில் இந்த மரங்கள் முறையாகப் பராமரிக்கப்பட்டன. மனிதர்கள், கால்நடைகள் உள்ளே சென்று வர முடியாத அளவில் மரங்களின் கிளைகள் தழையுடன் அடர்ந்து காணப்பட்டன. இயற்கைச் சீற்றத்தை தடுக்கும் சக்தி வாய்ந்தவையாக இவை இருந்தன.

காலப்போக்கில் இதன் மீதான அரசின் கவனமும், பராமரிப்பும் குறைந்து போனது. வனத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள இந்தப் பகுதியை தினக் கூலி அடிப்படையில் தாற்காலிகப் பணியாளர் ஒருவர் கண்காணித்து வந்தார். கடந்த பல மாதங்களுக்கு முன்னர் அந்தப் பணியாளரும் பணியில் இருந்து நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது, தாய் மரங்கள், கிளைகள் வெளி நபர்களால் வெட்டப்பட்டும், கால்நடைகளால் சேதப்படுத்தப்பட்டும் வருகின்றன. இதனால், இந்த அரண் அமைக்கப்பட்டதன் நோக்கமும், அதன் வளமும் சிதைந்து வருகிறது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்த அரண் உரிய பராமரிப்பையும், பாதுகாப்பையும் மீண்டும் பெற வேண்டும் என்பதே இயற்கை ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு.

**கடலூர் கடற்கரையில் அதிகரித்து வரும் ஜெல் மீன்கள்**

First Published : 26 Aug 2011 02:05:41 AM IST



கடலூர்: கடலூர் கடற்கரை மற்றும் உப்பனாற்றுப் பகுதிகளில், நெருப்புச் சொரி என்று மீனவர்களால் அழைக்கப்படும், ஜெல்லி மீன்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

ஜெல்லி மீன்கள் விஷத் தன்மை கொண்டது. கைகளில் பட்டாலே கடுமையாக தோல் அரிப்பு ஏற்படும். ஜெல்லி மீன்களின் எண்ணிக்கை கடலூர் கடற்கரைப் பகுதிகளில் தற்போது அதிகம் காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கிறார்கள். கடலூர் மாவட்டம், பிச்சாவரம் பகுதியில் மட்டுமே தற்போது மாங்குரோவ் காடுகள் எனப்படும் சுரபுன்னைக் காடுகள் உள்ளன. பல

ஆண்டுகளுக்கு முன், கடலூர் மாவட்டத்தில் உள்ள உப்பனாற்றுப் பகுதிகள் முழுவதும், சுரபுன்னைக் காடுகள் அடர்ந்து இருந்ததாகக் கூறப்படுகிறது.

அதன் எச்சங்களை தற்போதும் கடலூர், நொச்சிக்காடு, தம்பனாம்பேட்டை, மடவாய் பள்ளம், நஞ்சலிங்கம்பேட்டை உள்ளிட்ட கடற்கரையோர உப்பனாற்றுப் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காண முடிகிறது. உப்பனாற்றின் கரைகளில் உள்ள தாவரங்களின் அடர்ந்த பகுதிகளுக்குள், ஆமைகள் வந்து முட்டையிடுகின்றன. ஆனால் உப்பனாற்றுத் தாவரங்கள் தற்போது பெரிதும் அழிந்து வருகின்றன. இத்தாவரங்களின் அழிவுக்கு, கடலூர் மாவட்ட உப்பனாற்றுப் பகுதியை, நல்ல வடிகாலாகப் பயன்படுத்தி, ரசாயன ஆலைகள் பலவும், கழிவுகளை கலப்பதுதான் காரணம் என்கிறார்கள், மீனவர்களும் கடலோர ஆராய்ச்சியாளர்களும். கடற்கரையின் அமைதிச் சூழல் பாதிக்கப்பட்டதால், கடலூர் மாவட்டக் கடற்கரையோரங்களில், முட்டையிடுவதற்கு ஆமைகளின் வருகை, வெகுவாகக் குறைந்துவிட்டதாக மீனவர்கள் தெரிவிக்கிறார்கள். கடல் ஆமைகள் பெரும்பாலும் ஜெல்லி மீன் குஞ்சுகளை விரும்பிச் சாப்பிடுகின்றன. ஆமைகள் வருகை குறைந்ததால் ஜெல்லி மீன்கள் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்து வருகின்றன.

மேலும் ஜெல்லி மீன்கள் வலைகளில் சிக்கினால் அவற்றின் விஷத் தன்மை காரணமாக, அந்த வலையை மீனவர்கள் கையாள்வதே கடினம் என்கிறார்கள் மீனவர்கள். இந்நிலையில் கடற்கரை உப்பங்கழிப் பகுதிகளில் கடல் ஆமைகள் வருகையை அதிகரிக்கும் நோக்கில், சுரபுன்னை, அவிசீனியா போன்ற தாவரங்களை உருவாக்கும் முயற்சியில், ஆலமரம் என்ற பொது நல அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

கடல் ஆமைகளின் வருகையையும் ஆய்வு செய்து வரும் இந்த அமைப்பு, இதுவரை கடலூரை அடுத்த திருச்சோபுரம், நொச்சிக்காடு, நஞ்சலிங்கம் பேட்டை, சித்திரைப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில், கடந்த 2 ஆண்டுகளில் 5 ஆயிரம் சுரபுன்னை விதைகளையும், 2 ஆயிரம் அவிசீனியா தாவர விதைகளையும் நட்டு இருப்பதாக, ஆலமரம் அமைப்பின் தலைவர் இளையராஜா தெரிவிக்கிறார்.

## 2950 ஹெக்டேர் பரப்பளவில் பழங்கள், காய்கறிகள் பயிரிட திட்டம்

First Published : 26 Aug 2011 12:29:40 PM IST

சிவகங்கை, ஆக. 25: சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு தோட்டக்கலைத் துறை மூலம், 2000 ஹெக்டேரில் பழ மரங்களும், 750 ஹெக்டேரில் காய்கறிகளும், 200 ஹெக்டேர் பரப்பளவில் மலர்களும் புதிதாக பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து, சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.இருளப்பன் கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் தோட்டக்கலை துறை மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ் பழங்கள், காய்கறிகள் சாகுபடி புதிய பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ், மா, பலா, பப்பாளி, எலுமிச்சை, முந்திரி ஆகிய பழ மரங்களை சுமார் 2000 ஹெக்டேர் பரப்பிலும், மல்லிகைப் பூவை 200 ஹெக்டேர் பரப்பிலும் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளுக்கு மானியம் அளிக்கப்படுகிறது.

காய்கறிகள் 750 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விதைகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

புதிய முறையில் ஒட்டு கன்று: இந்த சாகுபடி பரப்புக்குத் தேவையான வீரிய ஒட்டு பழக்கன்றுகள், தேவகோட்டை மற்றும் நேமத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

ஒட்டு மாங்கன்றுகள் உற்பத்தியில் புதிய தொழில்நுட்பமாக மென்தண்டு ஒட்டு கட்டுதல் முதல்முறையாகக் கடைபிடிக்கப்படுகிறது. இதன்மூலம், மாங்கொட்டைகள் முளைத்து இளங்கன்றுகளிலேயே ஒட்டு கட்டுவதால், அதிக வீரியத்துடன் கன்றுகள் விரைவாக வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கிறது.

இவ்வாறு, இந்த ஆண்டு தேவகோட்டைப் பண்ணையில் 50 ஆயிரமும், நேமம் பண்ணையில் ஒரு லட்சத்து 20 ஆயிரமும் ஒட்டுக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பப்பாளி சாகுபடி: பப்பாளி பழங்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதன் மூலம், விவசாயிகள் அதிக வருமானம் பெற வாய்ப்பு உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் இதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. எனவே, புதிதாக அதிக பரப்பில் பப்பாளி சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது.

இதற்கென அதிக விளைச்சல் தரும் புதிய ரக பப்பாளி கன்றுகள் தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

பிரபலமாகும் எலுமிச்சை சாகுபடி: இந்த மாவட்டத்தில் பிரபலமாகி வரும் எலுமிச்சை சாகுபடியை ஊக்குவிக்க, 75 ஹெக்டேர் பரப்பில் எலுமிச்சை வளர்க்க விவசாயிகளுக்கு மானியத்தில் கன்றுகள் வழங்கப்படுகின்றன. இதற்கென, நேமம் பண்ணையில் 21 ஆயிரம் எலுமிச்சை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த உயர் விளைச்சல் ரக கன்றுகள், விவசாயிகளுக்கு உரிய பருவத்தில் விநியோகிக்க ஏற்றவாறு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை, சிவகங்கை மாவட்ட விவசாயிகள் தங்களது வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மூலம் பெற்று சாகுபடி செய்து பயன் பெறலாம்.

---

தினமலர்

# நடப்பு கரீப் பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி உயரும்

ஆகஸ்ட் 27,2011,02:48



புதுடில்லி:நடப்பு 2011-12ம் ஆண்டு பயிர் காலத்தில், கரீப் பருவத்தில், நாட்டின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, சிறப்பான அளவில் அதிகரிக்கும் என, சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு அதிகரித் துள்ளதே இதற்கு முக்கியக் காரணம் என, அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது.

சென்ற 2010-11ம் பயிர் காலத்தில் (ஜூலை - ஜூன்), எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, மிக அதிகளவாக 3.11 கோடி டன் என்ற அளவில் இருந்தது. இதில், கரீப் பருவத்தின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியின் பங்களிப்பு, 2.08 டன் என்ற அளவில் சிறப்பாக அதிகரித்துக் காணப்பட்டது.நடப்பு கரீப் பருவத்தில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு, 1.70 கோடி எக்டேராக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே பருவத்தில், 1.64 கோடி எக்டேராக இருந்தது. மேலும், அதிகரிக்கப்பட்டுள்ள பரப்பளவில், சோயா பீன், எள்ளு, மற்றும் ஆமணக்கு ஆகியவை, கணிசமான அளவு பயிரிடப்பட்டுள்ளன.

இருப்பினும், நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிரிடும் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்துள்ளது என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் சுசில் கோயன்கா தெரிவித்தார்.

**மரவள்ளி முத்தரப்பு கூட்டத்தில் விவசாயிகள் காரசாரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:27 IST

சேலம் : சேலம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மரவள்ளி முத்தரப்பு கூட்டத்தில், மரவள்ளி விவிவசாயிகள், ஆலை அதிபர்கள் மீது சரமாரி குற்றச்சாட்டு சுமத்தி, தீர்வுகாண வலியுறுத்தினர். பிரச்னைக்கு, சுமுகமான முறையில் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அரசு தரப்பில் உடனடி தீர்வு காண இயலாது என, கலெக்டர் கைவிரித்ததை அடுத்து, கூட்டத்தில் முடிவு ஏற்படாமல் முடிவடைந்தது.

சேலம், கலெக்டர் அலுவலகத்தில், மரவள்ளி விவசாயிகள், சேகோ ஆலை அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்ட முத்தரப்பு கூட்டம், கலெக்டர் மரகபூஷணம் தலைமையில் நடந்தது. இதில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செங்கோட்டுவேல் முன்னிலை வகித்தார். மரவள்ளி விவசாயிகள் வையாபுரி, கோவிந்தராஜ், ராஜமாணிக்கம், தங்கவேல், சண்முகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த, 1990ம் ஆண்டு முதல் முறையாக மரவள்ளி விவசாயிகள், சேகோ ஆலை அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்ளும் வகையில் முத்தரப்பு கூட்டம் நடத்தப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு மேல் நடந்து வரும் முத்தரப்பு கூட்டத்தில், மரவள்ளி விவசாயிகளுக்கு, ஆலை அதிபர்களுக்கு இடையே சுமுகமான உடன்பாடு ஏற்படவில்லை. சேகோ அதிபர்கள், மரவள்ளி விவசாயிகள் கொண்டு வரும் கிழங்கின் மாவு சத்தை பரிசோதனை செய்யும் "பாயின்ட் மிஷனில்' அளவு குறைத்து வைத்துள்ளனர். எடை மிஷனிலும் அளவு குறைத்து வைத்து, விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த, "பாயின்ட் மிஷனில்' கிழங்கின் மாவு சத்து, 20 பாயின்ட் என்றால், இரண்டு பாயின்ட் குறைவாகவே காட்டுகிறது. அதேபோல, எடை மிஷனிலும் அளவு குறைத்து காண்பிக்கிறது. மரவள்ளி விவசாயிகள் மாவு பூச்சி தொல்லையால், தரமற்ற கிழங்குகளை உற்பத்தி செய்யும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இடைத்தரகர்கள் மூலம் மில் அதிபர்கள் கிழங்குகளை வாங்குவதால், விவசாயிகளுக்கு நேரடியாக கிடைக்க வேண்டிய லாபம் பல மடங்கு குறைகிறது. கிழங்கில் உள்ள தோல், மண் உள்ளிட்ட கழிவுகளை ஆலை அதிபர்கள் அதிகளவு கழித்து, விலை நிர்ணயம் செய்கின்றனர். எனவே, ஒவ்வொரு தாலுகாவிலும், அரசின் ஒழுங்குமுறை விற்பனை குழுமுத்தின் மூலமாக அல்லது வேளாண்மை துறை மூலமாக பொதுவான இடத்தில் எடை மிஷன் மற்றும் கிழங்கு மாவு சத்து கண்டு பிடிக்கும் "பாயின்ட் மிஷினை' வைக்க வேண்டும்.

கலெக்டர் தலைமையில், "மார்க்கெட்டிங் கமிட்டி' அமைத்து, அதில் ஐந்து சேகோ அதிபர்கள், ஐந்து விவசாயிகள் கொண்ட கண்காணிப்பு குழுவை அமைக்க வேண்டும். புதிய ரக மரவள்ளி கிழங்குகளை உற்பத்தி செய்ய, மரவள்ளி ஆராய்ச்சி நிலையத்தை, மாவட்ட நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும். தரமான உரம் மற்றும் நடவு, கிழங்கு பிடுங்க நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விவசாயிகள் தரப்பில் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

விவசாயிகள் கிழங்கு நடவு செய்யும் போதே, புரோக்கர்களிடம் பணம் வாங்கி கொள்கின்றனர். இதனால், புரோக்கர் ஆதிக்கம் இருப்பதை தடுக்க முடியவில்லை. பொது இடத்தில் எடை மிஷின், "பாயின்ட்' மிஷின் வைத்தால், அதனை ஏற்றுக் கொள்ள ஒப்புக்கொள்கிறோம். அதேபோல், ஒவ்வொரு ஆலையிலும் உள்ள "பாயின்ட்' மிஷின் மூலமாக அளவு பரிசோதனை செய்வோம். அனைத்து ஆலை அதிபர்களும், விவசாயிகளை ஏமாற்றும் வேலையில் ஈடுபடுவதில்லை. மாவு பூச்சி தாக்குதலுக்கு ஒட்டுண்ணி வழங்கப்படுகிறது. எங்கள் செலவில் கூட விவசாயிகளுக்கு வழங்க, நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என்று, ஆலை அதிபர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கலெக்டர் மகரபூஷணம் பேசியதாவது: விவசாயிகள், சேகோ ஆலை அதிபர்களாகிய உங்கள் பிரச்னையில், இருதரப்பினரும் பிரச்னைக்கு சுமூகமான முறையில் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அரசு எடை மிஷின், தரம் பார்க்கும், "பாயின்ட்' மிஷின் கொடுக்கும் என உத்திரவாதம் அளிக்க முடியாது. உங்களின் பிரச்னைக்கு, அரசு தரப்பில் உடனடி தீர்வு கண்டுவிட முடியாது. எனவே, இருதரப்பும் பிரச்னைக்கு இறுதி முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும். மரவள்ளி ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள், வேளாண் பல்கலை துணைவேந்தர் மூலம் குழு அமைத்து, எடை மிஷின், பாயின்ட் மிஷினுக்கு தரச்சான்று வழங்குவது குறித்து பரிசீலனை செய்யலாம் என்றார். முத்தரப்பு கூட்டத்தில், மரவள்ளி விவசாயிகள், சேகோ அதிபர்களுக்கு இடையே உடனடி தீர்வுகாண இயலாது என, கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்த நிலையில், பிரச்னைக்கு தீர்வு காணப்படாமல் கூட்டம் முடிவடைந்தது.

**உரம் விற்பனை கண்காணிக்க சிறப்பு கண்காணிப்பு குழு: கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:44 IST

நாமக்கல்: "தனியார் உர விற்பனை மையங்களில், அதிக விலைக்கு உரம் விற்பனை செய்வதை கண்காணிக்க, சிறப்பு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது' என, மாவட்ட கலெக்டர்

குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில், தனியார் உர விற்பனை மையங்களில், பொட்டாஷ் மற்றும் பாக்டாம்பாஸ், 20க்கு 20 காம்பளக்ஸ் உரங்கள், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக புகார் பெறப்பட்டது. அதன்பேரில், வேளாண் துறை அலுவலர்களால் சிறப்பு உர கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆய்வின்போது, உர உரிமம், உர விற்பனை விலை குறித்து தகவல் பலகை வைக்கப்பட்ட விவரம், உர இருப்பு பதிவேடு, கொள்முதல் பட்டியல், விற்பனை ரசீது மற்றும் உர விற்பனை ஆகியவற்றை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்தனர். அதில் பல்வேறு குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, ஒரு விற்பனை மையத்தில் உர உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டது. அனுமதி பெறாத உரங்களை இருப்பு வைத்து வினியோகம் செய்த, 14 உரக்கடைகளில் விற்பனை தடை செய்யப்பட்டது. விவசாயிகள், தனியார் விற்பனை நிலையங்களில் உரங்களை வாங்கும்போது, விற்பனை ரசீது கட்டாயமாக கேட்டுப்பெற வேண்டும்.
அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் எந்த உர விற்பனையாளரும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்யக்கூடாது. அவ்வாறு கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மீது, உரக்கட்டுப்பாடு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 50 சதவீத மானியத்தில் பழச்செடி காய்கறி விதை: வேளாண் அதிகாரி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:44 IST

நாமக்கல்: "விவசாயிகள், 50 சதவீத மானியத்தில் பழச்செடிகள், காய்கறி விதைகள் பெற முன் பதிவு செய்து பயன் பெறலாம்' என, புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் கங்காதரன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: புதுசத்திரம் வட்டாரத்தில், தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில், 50 சதவீதம் மானியத்தில் மா, நெல்லி, சப்போட்டா ஆகிய ஒட்டு பழச்செடிகள் பெறுவதற்கு மற்றும் தற்போது இருப்பில் உள்ள காய்கறி விதைகளான, கோ 3 தக்காளி, கே 2 மிளகாய் விதை, கோ 5 வெங்காய விதை மற்றும் புடல், பாகல் விதைகளை பெறுவதற்கு, விவசாயிகள் புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் முன் பதிவு செய்து பயன்பெறலாம். ஒரு விவசாயிக்கு பழச்செடிகள் ஒரு ஹெக்டேருக்கும், காய்கறி விதைகள் அரை ஹெக்டேருக்கும் வழங்கப்படும். மேலும்

விபரங்கள் பெற, புதுச்சத்திரம் வட்டார தோட்டக்கலை துறை அலுவலர்களை அணுகி அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**உரம் பயன்பாடு ஈரோட்டில் அதிகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:30 IST

கோபிசெட்டிபாளையம் : ""ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதில், இந்திய அளவில் ஈரோடு மாவட்டம் முன்னிலை வகிக்கிறது," என, வேளாண் தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் சின்னசாமி கூறினார்.

கோபியில் உரம், பூச்சி மருந்து விற்பனையாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் அவர் பேசியதாவது: தமிழகத்தில் ஆண்டுக்கு ஒரு லட்சத்து 68 ஆயிரம் டன் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பரிந்துரையை விட விவசாயிகள் அதிகளவில் ரசாயன உரங்களை இடுகின்றனர். சென்ற நான்கு மாதங்களில் மட்டும் 18 ஆயிரத்து 447 டன் யூரியா, 10 ஆயிரத்து 886 டன் டி.ஏ.பி., 5,621 டன் பொட்டாஷ், 13 ஆயிரத்து 741 டன் காம்ப்ளக்ஸ் ஆகியவை ஈரோடு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த மாதத்தில் 3,000 டன் டி.ஏ.பி மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன.

பரிந்துரைக்கப்பட்டதை விட தேவைக்கு அதிகமாக ரசாயன உரங்கள் பயன்படுத்துவதில் ஈரோடு, சேலம், திருச்சி மாவட்டங்கள் முன்னிலையில் உள்ளன. தேவைக்கு அதிகமாக உரம் பயன்படுத்தப்படுவதை குறைக்கவும், மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து அதற்கேற்ப உரமிட, விவசாயிகள் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார். வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி, இடுபொருள் வினியோகிப்பாளர் சங்க செயலாளர் சுப்பிரமணி, பொருளாளர் சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பொட்டாஷ் உரம் தட்டுப்பாடு தீர்க்க வேளாண் துறை உறுதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:24 IST

கோவை : "பொட்டாஷ் உர தட்டுப்பாடு, இன்னும் 20 நாட்களில் முடிவுக்கு வரும்' என்று, கோவையில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், வேளாண் துறை அதிகாரிகள் உறுதியளித்தனர். கோவையில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில்,

உரப்பற்றாக்குறை இருப்பதாக, விவசாயிகள் புகார் தெரிவித்தனர். பதிலளித்த வேளாண் துறை அதிகாரிகள், "யூரியா தேவையான அளவுக்கு இருப்பில் உள்ளது. 20 நாட்களில் பொட்டாஷ் உரம் வந்து விடும். தற்போதைய தேவையை கருத்தில் கொண்டு, நீலகிரி மாவட்டத்துக்கு செல்ல வேண்டிய பொட்டாஷ் உரம், கோவை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது,' என்றனர். முந்தைய விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மனு கொடுத்த, பெற்றோரை இழந்த மாணவன் வெங்கடேஷ் குமாருக்கு, "டிப்ளமோ இன் ஏவியேசன்' படிப்பதற்கு, இந்தியன் வங்கி பசூர் கிளை சார்பில் ரூ.1.73 லட்சம், கல்விக்கடனை கலெக்டர் கருணாகரன் வழங்கினார்.கூட்டத்தில் பேசிய விவசாயிகள், "பார்த்தீனியம் செடி அழிக்கும் பணியை, தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் செய்யும்படி' கோரிக்கை விடுத்தனர்.

"கொள்கை முடிவு என்பதால், அரசு தான் இது பற்றி தீர்மானிக்க வேண்டும்' என்று பதிலளித்தார், கலெக்டர். பார்த்தீனியம் செடி அழிப்பதற்கு பயன்படும் மெக்சிகன் வண்டுகளை இலவசமாக வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. பதிலளித்த வேளாண் துணை இயக்குனர் இளங்கோவன், ""அந்த வண்டுகள், சூரியகாந்தி விதைகளை தின்று விடும். எனவே, தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் தான், வண்டுகளை பயன்படுத்த வேண்டும்," என்றார். கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கற்பகம், கூட்டுறவு இணைப்பதிவாளர் வெள்ளியங்கிரி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**பஞ்சு விலை உயர்வதால் நூல் விற்பனை நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,00:44 IST

திருப்பூர் : பஞ்சு விலை உயர்ந்து வருவதால், நூல் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதால், நூற்பாலைகள் விற்பனையை இறுக்கத் துவங்கியுள்ளன.கடந்த இரண்டு ஆண்டுகளாக, பஞ்சு விலை அபரிமிதமாக உயர்ந்ததால், நூல் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இருப்பினும் கடந்த சில மாதங்களாக, பஞ்சு விலை குறைந்ததாலும், நூல் கொள்முதல் வெகுவாக குறைந்ததாலும், தேக்கம் ஏற்பட்டு, நூல் விலை சரிந்தது. சாயத்தொழில் பிரச்னை தீராத தலைவலியாக இருப்பதால், நூல் விலை குறைந்த பிறகும், உற்பத்தியாளர்கள் கொள்முதலில் ஆர்வம் காட்டவில்லை.

இந்நிலையில், பருத்தி ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகளை மத்திய அரசு முழுமையாக தளர்த்தியதால், பஞ்சுக்கு மீண்டும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அறுவடை நேரம் நெருங்குவதால், விலையை உயர்த்தி லாபம் பெறலாம் என்ற பேராசையுடன், பஞ்சு வியாபாரிகள் பருத்தி

பதுக்கலை மீண்டும் துவக்கியுள்ளனர். இதனால், பஞ்சு விலை உயரத்துவங்கியுள்ளது. ஒரு கேண்டி பஞ்சு விலை 3,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளதால், நூல் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நூல் விற்பனையை ஊக்குவிக்க, கூடுதலாக வழங்கப்பட்ட சலுகைகள் கடந்த சில நாட்களாக நிறுத்தப்பட்டன. கடனுக்கு நூல் வழங்குவதும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. செப்., மாதத்தில் உள்ள பஞ்சு விலை அடிப்படையில் புதிய நூல் விலை நிர்ணயம் செய்யப்படும். நூல் விலை அதிகமாக வாய்ப்பு இருப்பதால், பெரும்பாலான நூற்பாலைகள் விற்பனையை குறைத்து வருகின்றன. சில நாட்களாக நூல் விற்பனையை நிறுத்தி வைப்பதில் கவனம் செலுத்துகின்றன.

**ஊட்டி "புரூக்கோலிக்கு' கிராக்கி உற்பத்தி செய்ய விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:02 IST

ஊட்டி : உயர்தர உணவு வகைகளில் பயன்படுத்தப்படும், "புரூக்கோலி' காய்கறிக்கு கிராக்கி உள்ளதால், உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் விளையும் விவசாய பொருட்களில் தேயிலை முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கு அடுத்தபடியாக, மலை காய்கறிகளான உருளைக்கிழங்கு, காரட், முட்டைகோஸ், பீட்ரூட் உட்பட பல்வேறு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பசுந்தேயிலைக்கு தகுந்த விலை கிடைக்காததால், விவசாயிகள் பிறவகை விவசாய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட துவங்கினர். சுற்றுலா மையமான ஊட்டி, கோவை உள்ள பல்வேறு நட்சத்திர ஓட்டல்களில் உயர் ரக உணவு வகைகள் தயாரிக்க பயன்படும் சிறப்பு காய்கறிகள் உற்பத்தியை பல சிறு விவசாயிகள் மேற்கொள்கின்றனர்.

இதில், புரூக்கோலி, கேப்சிகம், புஷ் பீன்ஸ், சூப் தயாரிக்க பயன்படும் செலரி, ரெட் கேபேஜ், வெள்ளரி உட்பட பல்வேறு காய்கறிகள் அடங்கும். இத்தகைய உணவுப் பொருட்களில் முக்கியத்துவம் வாய்ந்த புரூக்கோலி எனப்படும் காலிபிளவர் வகை காய்கறிக்கு தற்போது நல்ல கிராக்கி உள்ளது. கிலோ ஒன்றுக்கு தற்போது 50 முதல் 55 ரூபாய் வரை கிடைப்பதால் இதன் உற்பத்தியில் சிறு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பருவமழை தொடரும் நிலையிலும், பல்வேறு கிராமங்களில் புரூக்கோலி உற்பத்தி அதிகரித்துள்ளது.இவை ஊட்டியில் உள்ள பல்வேறு ஓட்டல்களுக்கு வினியோகம் செய்யப்படுகின்றன. கோவை உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

### விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 27,2011,01:50 IST

கரூர்: "தாந்தோணி வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு சம்பா சாகுபடி செய்யும் வகையில் விவசாய விளைபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது' என வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: சம்பா பருவத்தில் விவசாயிகள் சாகுபடி செய்ய வசதியாக விவசாய நெல் விதைகள், ஆந்திரா பொன்னி, ஐ.ஆர்., 20, ஏ.டி.டீ., 39, வெள்ளை பொன்னி, உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, நெல் நுண்ணூட்டம் மற்றும் பயறு விதைகளான துவரை, உளுந்து ஆகியவை தேவையான அளவில் தாந்தோணி வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மான்ய விலையில் விதைகள் உள்ளிட்ட இடுபொருட்கள் தேவைப்படுவோர் சம்பந்தப்பட்ட களப்பணியாளர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### *நீலகிரி விவசாயிகள், பட்டு உற்பத்திக்கு தேவையான மல்பரி செடிகளை ஏக்கர் கணக்கில் நடவு செய்து நிரந்தர லாபம் பெறலாம் பட்டு வளர்ச்சி துறை மண்டல இணை இயக்குனர் யோசனை*

*கூடலூர், ஆக.27–*
*நீலகிரி மாவட்ட விவசாயிகள் பட்டு உற்பத்திக்கு தேவையான மல்பரி செடிகளை ஏக்கர் கணக்கில் நடவு செய்து ஏற்ற இறக்கம் இல்லாமல் நிரந்தர லாபத்தை பெறலாம் என பட்டு வளர்ச்சி துறை மண்டல இணை இயக்குனர் சந்திரசேகரன் யோசனை தெரிவித்துள்ளார்.*

*பட்டு வளர்ச்சி விழிப்புணர்வு கூட்டம்*

*தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சி துறை சார்பில் 2010–2011–ம் ஆண்டு கிரியா ஊக்கி*

திட்டத்தின் கீழ் பட்டு வளர்ச்சி விழிப்புணர்வு மற்றும் இருசுழற்சியின புழு வளர்ப்பை ஊக்குவித்தல் குறித்த கூட்டம் கூடலூர் அருகே உள்ள மேல்கூடலூர் புனித மரியன்னை பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற் றது.

கூட்டத்துக்கு கோவை பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனரும், ஈரோடு மண் டல இணை இயக்குனருமான சந்திர சேகரன் தலைமை தாங் கினார். குன்னூர் உதவி ஆய் வாளர் லிங்கராஜ் அனை வரையும் வரவேற்றார். உடு மலை பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பன்னீர் செல்வம் திட்ட விளக்க உரையாற்றினார். கூடலூர் சிண்டிகேட் வங்கி மேலாளர் கணேசன், சிவாஜி ஆகியோர் கருத்துரை வழங்கினர். பின்னர் பட்டு வளர்ச்சி துறை மண்டல இணை இயக்குநரும், கோவை உதவி இயக்குனருமான சந்திர சேகரன், மகளிர் குழு, தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் மத்தியில் பேசினார். அப் போது அவர் கூறியதாவது:–

இறக்குமதி

பட்டு வளர்ப்பு விவசாயம் சார்ந்த தொழில். பட்டு வளர்ப் புக்கு தேவையான மல்பரி செடிகளை விவசாயிகள் நட்டு பயன்பெறலாம். ஏக்கருக்கு 5 ஆயிரம் செடிகள் நடலாம். இதனை 3 வகையாக பிரித்து மாதம் 3 தடவை வருமானம் பெறலாம். மல்பரி விவசாயத்தில் விவசாயிகள் கவனம் செலுத்தினால் அதிக பலன்களை பெற முடியும்.

½ ஏக்கர் மல்பரி பயிரிட்டால் ஆண்டுக்கு ரூ.1 முதல் ரூ.2½ லட்சம் வரை வருமானம் பெறலாம். இந்தியாவில் பட்டின் தேவை அதிகமாக உள்ளது. ஆனால் தேவைக்கு ஏற்ப உற்பத்தி இல்லாததால் சீனாவில் இருந்து அதிகளவு பட்டு இறக்குமதி செய்யப்படு கிறது.

நிரந்தர லாபம் பெற முடியும்

காய்கறி விளைச்சல் அதிக ரித்தால் விலை வெகுவாக குறையும், இல்லையெனில் தேவைக்கு போக மீதமுள்ள காய்கறிகள் வீணாகி விடுகின் றன. ஆனால் பட்டு வளர்ப்பில் ஏற்ற இறக்க விலை இல்லை. என்றும் விவசாயிகளுக்கு நிரந்தர லாபம் பெற முடியும். இதேபோல் மல்பரி நர்சரி பண்ணை அமைத்தும் லாபம் பெறலாம்.

25 சென்ட் நிலம் இருந்தால் மாதம் ரூ.5 ஆயிரம் வரை லாபம் பெற முடியும். இதற்காக 24 மணி நேரமும் பாடுபட வேண்டிய நிலை இல்லை. பெண்களும் மல்பரி விவசா யத்தில் ஈடுபடலாம். கணிச மான வருமானத்தை பெற லாம். மேலும் பல விவரங்களை பெற பட்டு வளர்ச்சி துறை அலுவலகத்தை அணுகினால் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க தயாராகவே இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

*பின்னர் மல்பரி ரகங்கள், விளைச்சல் குறித்து மசகல் அரசு பட்டு பண்ணை ஆய் வாளர் பிரின்ஸ் மோகன், மண் பரிசோதனை, உர நிர்வாகம் குறித்து மசினகுடி ஆய்வாளர் ராஜமாணிக்கம், பட்டு தொழில் அனுபவம் குறித்து ஆனைகட்டி முன்னோடி பட்டு விவசாயி குமாரராஜா ஆகியோர் விளக்க உரையாற்றி னர். பின்னர் விஞ்ஞானிகள், விவசாயிகள் கலந்துரையாடல் நடைபெற்றது. முடிவில் குன்னூர் தொழில் நுட்ப உதவியாளர் இஜாஸ் நன்றி கூறினார்.*

## குன்னூரில் லாரிகள் வேலை நிறுத்தம்: தேயிலை விலை வீழ்ச்சி ஏற்படும் அபாயம்

*குன்னூர், ஆக.27–*
*குன்னூரில் லாரி உரிமை யாளர்கள் வேலை நிறுத் தம் காரணமாக தேயிலை விலை வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளது.*
*பச்சை தேயிலை*
*நீலகிரி மாவட்டத்தில் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். சிறு தேயிலை விவசாயிகளின் தோட்டத்தில் கூலி தொழிலா ளர்களும் இலை பறித்தல், மழைநீர் கால்வாய் எடுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.*
*தற்போது பச்சை தேயி லைக்கு 7 ரூபாய் 50 பைசா முதல் ரூ.8.50 வரை வழங் கப்பட்டு வருகிறது. 'ஏ' கிரேடு பச்சை தேயிலைக்கு ரூ.17 ரூபாய் வரையிலும், 'பி' பிளஸ் கிரேடு பச்சை தேயிலைக்கு 14 ரூபாய் வரையிலும் விலை வழங்கப் பட்டு வருகிறது.*
*இந்த நிலையில் கடந்த 18–ந் தேதி முதல் தமிழகம் மற்றும் 6 மாநிலங்களை சேர்ந்த லாரி உரிமை யாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடு பட்டு வந்தனர். வேலை நிறுத்த போராட்டம் கடந்த 4 நாட்களுக்கு முன்பு விலக்கி கொள்ளப்பட்டது.*
*வேலை நிறுத்தம்*
*குன்னூரில் இயங்கும் 300 லாரிகளில் 150 லாரிகள் தேயிலை பாரம் ஏற்றி செல்லும் லாரிகளாக உள்ளன. லாரி களுக்கு வாடகை உயர்வு கேட்டு தொடர்ந்து தேயிலை பாரம் ஏற்றும் 150 லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.*
*கடந்த 2 நாட்களுக்கு முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தை யில் ரோடு டிரான்ஸ்போர்ட் சங்கத்தினர் 9 சதவீதம் வரை வாடகை உயர்த்தி தருவதாக குன்னூர் லாரி*

உரிமையாளர் களிடம் கூறினர். இருப்பினும் லாரி உரிமை யாளர்கள் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை வாடகை உயர்வு தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனால் தேயிலை பாரம் ஏற்றும் லாரி உரிமையாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேச்சுவார்த்தை

இந்த நிலையில் ரோடு டிரான்ஸ்போர்ட் சங்கத்தினர் தேயிலை வாரியத்திடமும், குன்னூர் போலீஸ் துணை சூப்பிரண்டிடமும் இது குறித்து கூறியுள்ளனர். குன் னூர் போலீஸ் துணை சூப்பி ரண்டு மாடசாமி, வருவாய் துறையினர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்த போவதாக கூறியுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினமும், நேற்றும் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் விற்பனையான தேயிலை தூளும் தேக்கம் அடையும் நிலை உள்ளது.

சுமார் 35 கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளது. கடந்த வாரத்தில் லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக தேயிலை தூள் தேக்கம் அடைந்து இருந்தாலும், பச்சை தேயிலைக்கு விலை குறையாமல் இருந்தது. ஆனால் இந்த வாரம் அதிகளவு தேயிலை தூள் தேங்கி நிற்பதால், பச்சை தேயிலைக்கு எவ்வாறு விலை நிர்ணயம் செய்வது என்ற குழப்பம் ஏற்படும் நிலை உள்ளது.

விவசாயிகள் பாதிப்பு

தேயிலை தூள் தேக்கத்தால் பச்சை தேயிலைக்கு கடுமை யான விலை வீழ்ச்சி ஏற்படுமா என்பது இன்று (சனிக்கிழமை) தெரிந்து விடும். தேயிலையை பொறுத்த வரை எந்த பிரச் சினை ஏற்பட்டாலும் சிறு விவசாயி களையே அந்த பிரச்சினை கடுமையாக பாதிக்கிறது.

ஏற்கனவே விலை வீழ்ச்சி யால் தத்தழித்து கொண்டு இருக்கும் சிறு விவசாயிகள் தேயிலை பாரம் ஏற்றும் லாரிகளின் வேலை நிறுத்தத் தால் இன்று நிர்ணயிக்கப்படும் பச்சை தேயிலையின் விலை யில் சரிவு ஏற்படுமா? என்ற அச்சம் நிலவி வருகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,860–2,950

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,980–4,020

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,850–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,700–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 2,013–00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரி உள்பட) 10,500–00
டின் (15 கிலோ) 1,750–00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,500.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 565–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஆக.26–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,200 | 85.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,060 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 4,100 | 44.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,800 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,600 | 68.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4000 | 32.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 2,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,000 | 54.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,900 | 41.00 |
| சர்க்கரை | ரூ. 3,100 | 32.00 |

### மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஆக.26–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு–

1. வி.797 22எம்.எம் — ரூ. 6,749
2. ஜெயதார் (கர்நாடகா) — ரூ. 7,311
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) — ரூ. 10,715
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் — ரூ. 9,701
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது — ரூ. 10,967
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். — ரூ. 10,545
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு — ரூ. 15,466

## கோவை உழவர் சந்தை

கோவை,ஆக.26–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 35–40 | காலிப்பிளவர் | ரூ. | 18–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–18 | பொரியல் தட்டை | ரூ. | 14–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 8–10 | தேங்காய் | ரூ. | 6–14 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–7 | பட்டாணி | ரூ. | 60–100 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 5–7 | கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| புடலை | ரூ. | 14–20 | அகத்தி | ரூ. | 10–12 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12–18 | வாழைக்காய் | ரூ. | 20–00 |
| சுரைக்காய் | ரூ. | 13–15 | குடைமிளகாய் | ரூ. | 28–32 |
| பாகற்காய் | ரூ. | 8–10 | சாதா பீன்ஸ் | ரூ. | 17–20 |
| கொத்தவரை | ரூ. | 12–16 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50–00 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 | கறிபீன்ஸ் | ரூ. | 17–20 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–8 | புஸ்பீன்ஸ் | ரூ. | 18–24 |
| மேராக்காய் | ரூ. | 12–16 | காளான் | ரூ. | 80–140 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12–24 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26–00 | மாங்காய் | ரூ. | 14–20 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16–20 | திராட்சை | ரூ. | 50–00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 20–21 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| இஞ்சி | ரூ. | 36–00 | கொய்யா1கிலோ | ரூ. | 20–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 12–16 | மாதுளை1கிலோ | ரூ. | 80–90 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–20 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 17–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 40–00 | மாம்பழம் | ரூ. | 20–40 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | ஆப்பிள் | ரூ. | 110–90 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | நெல்லிக்காய் | ரூ. | 32–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–22 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| முள்ளங்கி | ரூ. | 12–15 | வெள்ளரி | ரூ. | 12–28 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20–24 | புளி 1 கிலோ | ரூ. | 75–80 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 16–20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 28–32 |
| நூல்கோல் | ரூ. | 18–20 | அவரை | ரூ. | 12–18 |
| கொத்தமல்லி | ரூ. | 20–24 | நிலக்கடலை | ரூ. | 26–32 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 22–00 | மக்காச்சோளம் | ரூ. | 18–24 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | | | |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | | | |
| புதினா | ரூ. | 16–00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 27700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 28,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 29,200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 13,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9500 |
| கொப்பரை நாடன் | ரூ. 6175 |
| கொப்பரை ராசு | ரூ. 6075 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6300 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 8150 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7450 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 18,100 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 19,200 |
| ரப்பர் பால் | ரூ. 14,000 |
| காப்பி | ரூ. 10,800 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3150 |
| நேந்திரகாய் | ரூ. 2600 |
| இஞ்சி | ரூ. 1450 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஆக.26–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,680 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1260 | 80.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1220 | 77.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லிஸ்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.186.00 | அதிகபட்சவிலை | ரூ.294.00 |
| சராசரி விலை | ரூ.175.12 | சராசரி விலை | ரூ.246.84 |
| குறைந்தபட்சவிலை | ரூ.160.00 | குறைந்தபட்சவிலை | ரூ.228.00 |

**பட்டு நூல் ரூ.1,730**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 20,200.00 | 20,520.00 | 20,240.00 |
| ஒரு கிராம் | 2,525.00 | 2,525.00 | 2,530.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 62,805.00 | 67,250.00 | 67,000.00 |
| ஒரு கிராம் | 67.20 | 67.25 | 67.00 |

# உழவர் சந்தை நிலவரம்

ஊட்டி, ஆக.27–

ஊட்டி உழவர் சந்தையில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:– (ஒரு கிலோ)

| | |
|---|---|
| கத்திரிக்காய் | –ரூ.14–16 |
| வெண்டைக்காய் | –ரூ.12 |
| தக்காளி | –ரூ.8 |
| ஆப்பிள் தக்காளி | –ரூ.12 |
| அவரைக்காய் | –ரூ.16 |
| புடலைங்காய் | –ரூ.16 |
| பீர்க்கங்காய் | –ரூ.18–22 |
| சுரைக்காய் | –ரூ.10 |
| பாகற்காய் | –ரூ.16 |
| கொத்தவரை | –ரூ.14 |
| பூசணி | –ரூ.10 |
| அரசாணிக்காய் | –ரூ.8 |
| பச்சை மிளகாய் | –ரூ.18 |
| சி.வெங்காயம் | –ரூ.16–18 |
| பெ.வெங்காயம் | –ரூ.19–20 |
| பொரியல்தட்டை | –ரூ.14 |
| முருங்கைக்காய் | –ரூ.18 |
| மாங்காய் | –ரூ.24–26 |
| வாழைக்காய் | –ரூ.20 |
| சேனைக்கிழங்கு | –ரூ.24 |
| உருளைக்கிழங்கு | –ரூ.14–16 |
| மேரக்காய் | –ரூ.10 |
| முள்ளங்கி | –ரூ.8–10 |
| கேரட் | –ரூ.14–16 |
| பீட்ரூட் | –ரூ.16 |
| நூல்கோல் | –ரூ.14 |
| டர்னிப் | –ரூ.8–10 |
| முட்டைகோஸ் | –ரூ.8 |
| காளிபிளவர் | –ரூ.18 |
| பட்டாணி | –ரூ.50 |
| பூண்டு | –ரூ.90–100 |
| இஞ்சி | –ரூ.18–32 |
| சாதா பீன்ஸ் | –ரூ.10 |
| கறி பீன்ஸ் | –ரூ.14 |
| புஷ் பீன்ஸ் | –ரூ.16 |
| டபுள் பீன்ஸ் | –ரூ.35 |
| ஊட்டி அவரை | –ரூ.45–50 |
| குடை மிளகாய் | –ரூ.24 |
| பஜ்ஜி மிளகாய் | –ரூ.18 |